# இரு மொழிகளிலும் கடிதம் அனுப்புதல் கட்டாயமானது

Sudaroli 20/01/2016

## வஜிர அபேவர்தன

பொது அரச கடிதங்களை வெளியிடும்போது அவை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அனுப்பிவைக்கப்படல் கட்டாயமானதாகுமென உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன அமைச்சின் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தில் இடம்பெற்ற 2016ஆம் ஆண்டுக்கான முதலாவது மாவட்ட செயலாளர் மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்திய போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதனை நடைமுறைப்படுத்துவதில் ஏதேனும் இடையூறுகள் ஏற்படுமாயின், அது குறித்து தமக்கு அறிவிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான பொது அரச கடிதங்கள் சிங்களமொழியில் கிடைப்பதனால் மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர்.

இவ்வாறாக மக்களின் அசௌகரியங்களைத் தீர்க்கும் வகையில் இரு மொழிகளிலும் கடிதங்களை அனுப்பும் நடவடிக்கை கட்டாயமாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் இப்போதும் பொது அரச கடிதங்கள் சிங்களமொழியிலேயே கிடைப்பதாகத் தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாட்டில் தமிழும் அரச கருமமொழியே எனத் தெரிவித்திருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.